# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 1986/31 - 2016 සැප්තැම්බර් මස 28 වැනි බදාදා - 2016.09.28**

1986/31 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*எனது இல.*: 3/කටා/ඉ.අත්/73.

*காணி அமைச்சின் குறிப்பு இல.*: LD/05/2008/D/389.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கட்டான பிரதேச செயலாளர் பிரிவில், தாசிய பத்துவே சிறு பிரிவில், கதிராண கிராமத்தில் அமைந்துள்ள, கம்பஹா நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட මූ. පි. ගම් 3993 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 1 முதல் 5 வரை காட்டப்பட்ட 39.8694 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கொழுவாபொக்குணவத்தை எனும் காணித்துண்டு.

**1. துண்டு இலக்கம்: 01**

காணியின் பெயர்: கொழுவாபொக்குணவத்தை; விபரம்: திறந்த தரிசு நிலம், தகடினால் வேயப்பட்ட நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருநர்: கண்டுபிடிக்கப்பட முடியாது; விஸ்தீரணம்: 0.5299 ஹெக்டயார்.

**2. துண்டு இலக்கம்: 02**

காணியின் பெயர்: கொழுவாபொக்குணவத்தை; விபரம்: தென்னந்தோட்டம், 25-30 வருட வயதிலான தென்னை மரங்கள் காணப்படுகின்றன. ஓட்டினால் வேயப்பட்ட 02 நிரந்தரக் கட்டிடங்கள் கல்வனைஸ் தகட்டினால் வேயப்பட்ட நிரந்தர 02 கட்டிடங்கள், கல்வனைஸ் தகட்டினால் வேயப்பட்ட தற்காலிக கட்டிடமொன்று கல்வனைஸ் தகட்டினால் வேயப்பட்ட நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி எஸ்பெஸ்டோஸ் தகட்டினால் வேயப்பட்ட 02 நிரந்தரக் கட்டிடங்கள் மற்றும் 04 கழிவறைகள் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்கப்பட முடியவில்லை; விஸ்தீரணம்: 38.5053 ஹெக்டயார்.

**3. துண்டு இலக்கம்: 03**

காணியின் பெயர்: கொழுவாபொக்குணவத்தை; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்கப்பட முடியவில்லை; விஸ்தீரணம்: 0.2913 ஹெக்டயார்.

**4. துண்டு இலக்கம்: 04**

காணியின் பெயர்: கொழுவாபொக்குணவத்தை; விபரம்: வீதி; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்கப்பட முடியவில்லை; விஸ்தீரணம்: 0.2043 ஹெக்டயார்.

**5. துண்டு இலக்கம்: 05**

காணியின் பெயர்: கொழுவாபொக்குணவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம். ஓட்டினால் வேயப்பட்ட நிரந்தரக் கட்டிடமொன்று, கழிவறையொன்று மற்றும் சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறு ஒன்று காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்கப்பட முடியவில்லை; விஸ்தீரணம்: 0.3386 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 09.30 மணிக்கு கட்டான பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும்,நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. எச். எச். ஆர். கிரிஎல்ல,
பிரதேச செயலாளர்,
கட்டான.

பிரதேச செயலகம்,
கட்டான,
2016, செத்தெம்பர் 27.

10 - 308

---

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம் )

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறியீட்டு இலக்கம்: டிக்/எல்ஏஎன்/02/30/30.

பொது மக்கள் தேவை நிமித்தம் அவசியப்படும் கீழ் குறிப்பிடப்படும் காணியை/காணிகள் மீதான அதிகாரங்கள் அனைத்தையும், அரசு கையேற்க தீர்மானித்துள்ளதாக, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மாத்தறை மாவட்டத்தில், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், வலஸ்கல மேற்கு கிராம அலுவலர் பிரிவில், வலஸ்கல கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை சிரேஷ்ட நில அளவையாளரின் வரைபட இலக்கம் மு.பி. மாறை 2647 இல் குறிப்பிடப்பட்ட கீழ் வரும் காணித் துண்டுகள்.

**01. துண்டு இலக்கம்: 01**
காணியின் பெயர்: கொடேகொரட்டுவ, தும்கொரட்டுவ அல்லது தும்வத்த என்னும் கொடெல்லஹேன; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0360 ஹெக்டயார்.

**02. துண்டு இலக்கம்: 02**
காணியின் பெயர்: கொடேகொரட்டுவ, தும்கொரட்டுவ அல்லது தும்வத்த ; விபரம்: பிரதான பாதை; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0015 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு திக்வெல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப் படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும்,நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பி.எஸ்.ரஞ்ஜித்,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

பிரதேச செயலகம்,
திக்வெல்ல,
2016, செத்தெம்பர் 09.

10 - 309

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*பிரதேச செயலாளரின் குறிப்பு இல.*: 6/3/7/15/11/6/42.
*காணி அமைச்சின் குறிப்பு இல.*: LD/05/2007/MV/117 G.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2016.01.07 ஆம் திகதிய, 1948/35 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பூ.பூ.வ. 18 குறைநிரப்பி இலக்கம் 63 பத்திரம் 45 இல் துண்டு இலக்கம் 2327 இனது விஸ்தீரணம் 0.4047 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனது விஸ்தீரணம் 0.1543 ஹெக்டயார் எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ.ஆர்.பீ.என்.பீ. கருணாதிலக,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2016, செத்தெம்பர் 23.

10 - 310

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.